## சோளத்தின் விலை நிலையாக இருக்கும்

அமெரிக்க ஐக்கிய நாடுகள் வேளாண் துறையின் (USDA) மதிப்பீட்டின் படி (2016-2017), இந்தியாவில் சோளம் 5.8 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 5.5 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா, கர்நாடகா, மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், தெலுங்கானா, தமிழ்நாடு, குஜராத், உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் சோளம் சாகுபடி செய்யப்படுகிறது. ஆடிப்பட்டம் (ஜூலை-செப்டம்பர்) மற்றும் புரட்டாசிப்பட்டம் (அக்டோபர்-டிசம்பர்) ஆகிய இரு பருவ காலங்களிலும் சோளம் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் 2014-2015 ஆம் ஆண்டு 4.2 லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 6.3 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

சோளத்தின் மொத்த நுகர்வில் 66 சதவிகிதம் உணவுக்காக பயன்படுத்தப்படுகின்றது. மற்றவை தீவனம் மற்றும் தொழிற்சாலைகளில் உபயோகப்படுத்தப்படுகின்றது. சமீப காலமாக இனிப்பு சோளம் மது தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றது. விதை வகைகளான மஞ்சள் சோளம், விதையாக உயர்தர தீவனப்பயிர் விளைச்சலுக்கு பயன்படுத்தப்படுகிறது. வெள்ளைச் சோளம், காரிச்சோளம் மற்றும் கருரெட்டு சோளம் ஆகியவை தீவனத்திற்காகவும் மற்றும் மொட்டு வெள்ளைச் சோளம் உணவு தானியத்திற்காகவும் பயிரிடப்படுகிறது. இரகங்கள் மற்றும் கலப்பினப் பயிர் வகைகளான கோ 30, பி.எஸ்.ஆர் 1 மற்றும் சி.எஸ்.ஹெச் 5 ஆகியவை தீவனம், தீவனப்பயிர் மற்றும் அடுமனை தயாரிப்பில் மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

தென்மேற்கு பருவத்தில் குறைவான மழையின் காரணமாக, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூரிலிருந்து, வெள்ளை சோளத்தின் வரத்து குறைந்துள்ளது. ஆதலால், வரும் மாதங்களிலும் சோளத்தின் விலை நிலையாக இருக்க வாய்ப்புள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், கடந்த 13 ஆண்டுகளாக திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடடத்தில் நிலவிய சோளத்தின் விலையை, சந்தை

ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் அறுவடையின் போது, தரமான சோளத்தின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 24-26 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி: 0422-2431405


**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :**


பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறு தானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003.
தொலைபேசி எண்: 0422-2450507